Written by Administrator
Thursday, 27 August 2009 11:39 -

□□□□□□□□**27.08.2009**



போலீசாரால், சாலையோரம் நடப்பட்ட கம்பங்கள் நேற்று அகற்றப்பட்டன.

காஞ்சியில் சாலையோரம் நடப்பட்ட கம்பங்கள் அகற்றம்: அதிகாரிகள் திடீர் நடவடிக்கை

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் நகர வீதிகளில் போலீசாரால் நடப்பட்ட கம்பம் மற்றும் விளம்பரப் பலகைகள் அகற்றப்பட்டது. மக்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

காஞ்சிபுரம் நகரின் முக்கிய சந்திப்புகளில் குற்றங்களை தடுக்க கண்காணிப்பு கேமரா பொருத்த போலீசார் முடிவு செய்தனர். அனைத்து கண்காணிப்பு கேமராக்களையும் போலீஸ் நிலையங்கள் மற்றும் டி.எஸ்.பி., அலுவலக கம்பவுட்டருடன் இணைக்க தீர்மானித்தனர்.

இதன்மூலம், போலீஸ் நிலையத்தில் அமர்ந்த படியே நகரில் போக்குவரத்தை கண்காணிக்கலாம்.

கேமராவை கம்ப்யூட்டருடன் இணைப்பதற்காக மின் ஒயரை எடுத்து செல்ல நகரின் முக்கிய வீதிகளான காமராஜர் வீதி, காந்தி ரோடு, ராஜ வீதிகளில், சாலையோரம் வரிசையாக இரும்பு கம்பங்கள் நடப்பட்டன. அவற்றின் மீது மின் ஒயர்கள் செல்லுகின்றன.

கம்பத்தின் மீது காஞ்சிபுரத்தில் புதிதாக துவக்கப்பட்ட ஜுவல்லரி விளம்பர பலகைகள் பொருத்தப்பட்டன.

உடனே மற்ற ஜுவுலிக் கடை மற்றும் ஜுவல்லரி உரிமையாளர்களும் தங்கள் கடை விளம்பரப் பலகைகளைப் பொருத்த ஆசைப்பட்டனர். இது தொடர்பாக, போலீசாரை அணுகினர். ஆனால், வாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

அண்ணா பட்டுக் கூட்டுறவு சங்கம் சார்பில் மட்டும், அவர்கள் கடைமுன் விளம்பரப் பலகைகள், போலீசார் அமைத்த கம்பங்கள் மீது பொருத்தப்பட்டன.

சாலையோரம் வரிசையாக விளம்பரப் பலகைகள் பொருத்தப்பட்டது பொது மக்கள் இடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்நிலையில், நேற்று காலை துணை முதல்வர் ஸ்டாலின் காஞ்சிபுரம் வந்து சென்றார். மாலை நகராட்சி ஊழியர்கள் ஜே.சி.பி., இயந்திரம் உதவியுடன் சாலையோரம் நடப்பட்டிருந்த கம்பங்களை பெயர்த்தெடுத்தனர்.

திடீரென விளம்பரப் பலகைகளுடன் கம்பங்கள் பெயர்த்தெடுக்கப்பட்டது மக்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ஸ்டாலின் உத்தரவின் பேரில் கம்பங்கள் அகற்றப்படுவதாக தகவல் பரவியது.

இது குறித்து நகராட்சி பொறியாளர் கருப்பையா கூறும்போது, நகர வீதிகளில் அனுமதி பெறாமல் கம்பங்கள் நடப்பட்டு விளம்பரப் பலகைகள் பொருத்தப்பட்டிருந்தன. அவற்றை அகற்றும்படி கலெக்டர் உத்தரவிட்டார். அதன்பேரில் அகற்றுகிறோம் என்றார்.

காஞ்சிபுரம் போலீஸ் டி.எஸ்.பி., சமுத்திரகனி கூறும்போது, முறையாக கலெக்டரிடம் அனுமதி பெற்று கம்பங்களை நட்டோம். அடுத்த மாதம் முதல்வர் காஞ்சிபுரம் வர உள்ளார். எனவே, நகர வீதிகளில் சாலையை அகலப்படுத்த உள்ளனர்.

அதற்கு இடையூறாக இருக்க வேண்டாம் என்பதற்காக கம்பங்கள் அகற்றப்பட்டன. மேலும் கம்பத்தின் மீது மின் ஒயர் செல்வதால் மின் ஒயர்களை கேமராக்களைப் பொருத்த மாற்று ஏற்பாடு செய்யும்படி கலர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக முதல்வர் வருகைக்குப் பின் முடிவு செய்யப்படும் என்றார்.

எம்.எல்.ஏ., கமலாம்பாள் கூறும்போது, விளம்பரப் பலகைகள் இடையூறாக உள்ளது எனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

தற்போது அகற்றப்படுவது நல்லது என்றார்.